செய்தி வெளியீடு:013 08.01.2013

**பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை–5**

**மாண்புமிகு முதலமைச்சரின் தகுதி பரிசுத் தொகை திட்டம்**

நடப்பாண்டு முதல் **12–ஆம்** வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ/மாணவியர்களில் முதல் **500** இடங்களைப் பெறும் மாணவியர் மற்றும் முதல் **500** இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு அவர்கள் பட்டய / பட்டப்படிப்பு முடிக்கும் வரை வருடத்திற்கு **ரூ.3000/–**வீதம் பரிசுத்தொகை வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

எனவே, மார்ச் **2012–இல்** நடைபெற்ற **12–ஆம்** வகுப்பு அரசு பொதுத்தேர்வுகளில் தமிழ் மொழியை ஒரு பாடமாக பயின்று தேர்வு எழுதிய பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ / மாணவியர்களில் **1167** மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற **மாணவர்கள்** மற்றும் **1168** மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற **மாணவிகள்** தங்களது மதிப்பெண் சான்று, சாதிச்சான்று மற்றும் தற்போது பயிலும் கல்லூரியிலிருந்து பெறப்பட்ட Bonafide சான்றுகளின் நகல்களுடன் அவர்கள் +2 பயின்ற மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பிற்படுத்தப்படடோர் நல இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**